LIFESAVING SOCIETY®
*The Lifeguarding Experts*

அன்புள்ள பெற்றோர்/பாதுகாவலருக்கு,

பாடசாலையில், லைஃப் சேவிங் சொசைட்டியின் ***Swim to Survive®*** (***ஸ்விம் டு சர்வைவ்***) திட்டத்தில் உங்கள் பிள்ளையின் வகுப்பு கலந்துகொள்கிறது. எதிர்பாராமல் ஆழமான நீருக்குள் விழநேர்ந்தால், உயிர் பிழைக்கத் தேவையான மூன்று முக்கியமான திறமைகளுக்கான பயிற்சியை *Swim to Survive* வழங்குகிறது. உங்கள் பிள்ளை பின் வருவனவற்றை கற்றுக்கொள்ளும்:

- ஆழமான நீருக்குள் **உருண்டு விழுதல்** (ரோல்)
- 1 நிமிடத்திற்கு தண்ணீரில் **கை கால்களை அடித்தல்** (ட்ரெட்)
- 50 மீட்டர்களுக்கு **நீந்துதல்** (ஸ்விம்).

***Swim to Survive***, 3 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான திட்டமாகும். இத் திட்டத்தில் மூன்று பாகங்கள் இருக்கின்றன.

1. நீருக்குள் நடக்கும் 3 நீச்சல் வகுப்புகள், 3 திறமைகளை கற்றுக்கொடுத்தல் (ஒரு தொடர் வரிசையாக உருண்டு விழுதல், கை கால்களை அடித்தல் மற்றும் நீந்துதல்)
2. ஒன்டாரியோ பாடத்திட்டத்துடன் தொடர்பான வகுப்பறையில் நடக்கும் 3 நீர் பாதுகாப்புப் பாடங்கள்.
3. ***Swim to Survive*** திட்டம் பற்றிய பெற்றோர்களுக்கான தகவல்.

ஒன்டாரியோவின் 3 ஆம் வகுப்புப் பிள்ளைகள், எதிர்பாரா விதமாக ஆழமான நீருக்குள் விழ நேரிட்டால் உயிர் தப்புவதற்கான அடிப்படைத் திறமைகளைக் கற்றுக்கொள்வதற்காக Swim to Survive திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நீச்சல் கற்றுக்கொள்வது எல்லாப் பிள்ளைகளுக்கும் பலனளிக்கும் ஒரு அடிப்படைத் திறமை; இருப்பினும், பாடசாலைக்கு உள்ளேயும் அல்லது வெளியேயும், நீச்சல் கற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் பல பிள்ளைகளுக்கு கிடைக்காது போகலாம். இதன் விளைவாக உயிர் பிழைக்கும் திறமைகளைக் கற்றுக்கொள்ள முக்கியத்துவம் கொடுப்பதோடு, எல்லாவித திறமைகளையும் அனுசரிக்கக்கூடிய விதத்தில் இத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
தண்ணீருக்கருகில் பாதுகாப்பாக இருக்க Swim to Survive முக்கியமான ஒரு படியென த லைஃப் சேவிங் சொசைட்டி நம்புகிறது. கனடாவின் ஒவ்வொரு பிள்ளையும் Swim to Survive தராதரத்தை எட்டினால் தண்ணீரில் மூழ்கிப்போகும் பிள்ளைகளின் எண்ணிக்கை பாதியாக குறைக்கப்படுமென நாங்கள் நம்புகிறோம். ஒன்டாரியோவின் கல்வி அமைச்சு இந்த முன்னெடுப்பை ஆதரித்து, இந்தத் திட்டத்தை 3 ஆம் வகுப்புப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு த லைஃப் சேவிங் சொசைட்டிக்கு நிதி உதவி அளித்துள்ளது.

இத் திட்டத்தில் பங்குகொள்ள உங்கள் பிள்ளையின் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. தண்ணீருக்குள் நடத்தப்படும் மூன்று, ஒரு மணிநேர வகுப்புகளுக்காக மாணவர்களும் அவர்களின் ஆசிரியர்களும் உள்ளூர் நீர்த் தடாகம் ஒன்றிற்கு பயணிப்பார்கள்.

***யூடியூபில் புதிய Swim to Survive வீடியோவை*** காணும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். இதை http://www.youtube.com/user/OntarioLifesaving இல் காணலாம். இந்த வீடியோ 3 ஆம் வகுப்பு பிள்ளைகள் Swim to Survive திறமைகளை கற்றுக்கொள்வதை காட்டுகிறது. இந்த வீடியோ 8 மொழிகளில் கிடைக்கும்.

இந்த, உயிர் பிழைப்பதற்கான பயிற்சித் திட்டம் பற்றிய மேலதிக தகவல் அல்லது கேள்விகள் உங்களுக்கு இருந்தால் 416-490-8844 என்ற இலக்கத்தில் என்னைத் தொடர்புகொள்ள தயங்கவேண்டாம் அல்லது sindyp@lifeguarding.com க்கு ஈமெயில் அனுப்பவும்.

உண்மையுள்ள,

Sindy Parsons

சின்டி பார்சன்ஸ்
பொதுசனக் கல்வி மேலாளர்

Reg. Charity No. 10809 7270 RR0001

400 Consumers Road
Toronto, Ontario M2J 1P8
Canada
**தொலைபேசி:** 416-490-8844
**தொலை நகல்:** 416-490-8766
**ஈமெயில்:** experts@lifeguarding.com
www.lifesavingsociety.com